## 63

# யார் மேல் பிசகு?

அன்றிரவு ஏதோ நடக்கப்போகிறது என்று நடேசனுக்குத் தெரிந்து விட்டது. பட்டு அந்தமாதிரி நடந்துகொண்டான். ஆகையால் ராஜம் இன்னும் அங்கே நின்று பேசிக்கொண்டிருந்தது அவனுக்குப் பிடிக்க வில்லை.

'நேரமாகிறதே, போய்ப் படுத்துக்கொள்ளுகிறதுதானே?' என்று சம்பிரதாயமாகச் சொல்லி விட்டுக் காம்ப் கட்டிலைப் போட்டுத் தன் படுக்கையை விரித்துக்கொண்டான்.

'எனக்குத் தூக்கம் வரவில்லை' என்று ராஜம் கைப்பிடிச் சுவரில் சாய்ந்துகொண்டு நின்றவள் பக்கத்தில் இருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தாள்.

'மணி பத்தாயிற்றே. இன்னுமா தூக்கம் வரவில்லை?'

'இன்று வரவே வராதுபோல் இருக்கிறது. எதற்காக இப்படித் திடீரென்று புறப்பட்டார்? என்ன அப்படி அவசரமான வேலை சென்னையில்? காலையில் கூட என்னிடம் ஒன்றும் பிரஸ்தாபிக்க வில்லையே!'

நடேசன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டான். ராஜம் உள்ளே போய்ப் படுத்துக்கொள்ளப் போவதாகத்தெரியவில்லை.

'கொஞ்ச நாட்களாகவே அவன் ஒரு மாதிரி இருக்கிறான். நான் கேட்டேன். பதில் சரியாக இல்லை.'

'அவருக்கு மத்தியான்னந்தான் தெரியும்போல் இருக்கிறது. மிகவும் அவசரமான ஆபீஸ் வேலையாம். சரியாகச் சாப்பிடக்கூட இல்லை.'

'காரணம், திடீரென்று இன்று ஏற்பட்டதல்ல என்று மட்டும் எனக்குத் தெரிகிறது' என்று நடேசன் தீர்மானமாகச் சொன்னதும், ராஜம் கொஞ்சம் கோபத்துடன் அழுத்தம் திருத்தமாக, 'நேற்றுத் தெரிந்திருந்தால்கூட என்னிடம் சொல்லாமல் இருந்திருக்க மாட்டார். இதுவரையில் அப்படி இருந்ததே இல்லை' என்றாள்.

*கலைமகள், ஜனவரி-1943.*

' என்னவோ, எனக்குத் தோன்றினதைச் சொன்னேன்.'

'உங்களுக்கு ஏன் அப்படித் தோன்றிற்று? காரணம்?'

'காரணமா?' என்று சற்று யோசித்துவிட்டு நடேசன், 'எனக்குச் சொல்லத் தெரியவில்லை. நாழிகை யாகிறது. படுத்துக்கொள்ளுங்கள் போய்' என்றான்.

'அறையில் போய்த் தனியாகப் படுத்துக் கொள்ள எனக்குப் பயமாக இருக்கிறது. இங்கே தான் கீழே படுக்கையைக் கொண்டுவந்து போட்டுக் கொள்ளப் போகிறேன்' என்று ராஜம் எழுந்தாள்.

'வேண்டாம்; இங்கே காற்று அதிகமாக இருக்கிறது. உடம்பு வலி எடுக்கும்' என்று நடேசன் ஏதோ தோன்றினதைச் சொன்னான்.

ராஜம் சிரித்துக்கொண்டே திரும்பி, 'நீங்கள் மட்டும் படுத்துக் கொள்ளலாமாக்கும்! நான் பேசிக் கொண்டே இருந்தால் உங்கள் தூக்கம் கலைந்து போகுமென்று பார்க்கிறீர்கள்; அதுதானே? நான் வேண்டு மானால் பேசவில்லை!' என்றாள்.

'என் தூக்கத்தைப் பற்றி என்ன? உங்கள் தூக்கந்தான்–'

'எனக்குத் தூக்கம் வந்தால்தானே கெடுவதற்கு? படுக்கையை எடுத்துக்கொண்டு வருகிறேன்' என்று ராஜம் உள்ளே போனாள்.

திருச்சி கன்டோன்மென்டில் ஒரு சிறு பங்களாவின் மாடியில் இரவு பத்து மணி சுமாருக்கு இந்த வாக்குவாதம் நடந்தது. நடேசனுடைய நண்பன் பட்டுவின் மனைவி ராஜம்; அவள் பி.ஏ. பட்டம் பெற்றவள். பட்டு தென்னிந்திய ரெயில்வே கம்பெனியில் உதவி ஆடிட்டர். பட்டு நிர்ப்பந்தம் செய்ததன் பேரில் நடேசன் இப்போதைக்கு அவன் வீட்டில் தங்கியிருந்தான். அவனுக்கு அகில இந்திய ரேடியோ நிலயத்தில் வேலை.

ராஜம் படுக்கையை எடுத்துக்கொண்டு வந்து கட்டிலுக்குச் சற்றுத் தூரத்தில் போட்டு விரித்து அதில் உட்கார்ந்துகொண்டு, பூவையும் கழுத்திலிருந்த சங்கிலியையும் எடுத்துப் படுக்கைக்குப் பக்கத்தில் கீழே வைத்தாள்.

நடேசன் சங்கடப்பட்டுப் போனவனாய், 'அறை விளக்கை அணைக்க வில்லையே; அணைக்கட்டுமா?' என்று கேட்டான்.

'வேண்டாம், வேண்டாம்; எரியட்டும்! சார்ஜ் ஒன்றுதானே!... ஆமாம்; அவர் ஒரு மாதிரி இருக்கிறார் என்று எப்படிச் சொன்னீர்கள்?'

'தூக்கம் வருகிறது; தூங்கட்டுமா?'

'அதற்குள் தூக்கம் வந்துவிட்டதாக்கும்! நீங்கள் இரண்டு பேரும் பாதி ராத்திரி வரையில் அரட்டை அடிக்கும்போது?'

'உண்மையைச் சொல்லட்டுமா? எனக்கு ஏதோ மனம் சஞ்சலப் படுகிறது. பட்டு ஊருக்குப் போவதாகப் புறப்பட்டது எதற்காக என்று...' என்று நடேசன் முடிப்பதற்குள், ராஜம் குறுக்கிட்டு, 'அது தான் அவசரமான ஆபீஸ்வேலை என்றாரே?' என்றாள்.

உடனே நடேசன் திடமாக, 'அது பொய்ச் சாக்கு என்று எனக்குத் தோன்றுகிறது' என்றான்.

ராஜம் அவன் பக்கம் திரும்பிக் கோபத்துடன், அதென்ன, நீங்கள் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'என்று சீறினாள்.

நடேசன் திடீரென்று துக்கம் நெஞ்சடைத்தபடி, பட்டுவைப் பற்றி நான் காரணமில்லாமல் ஏதாவது சொல்லுவேனா? ஆனால்–' என்று சொல்லி நா எழாமல் நிறுத்தினான்.

அவனுடைய திண்டாட்டத்தைக் கண்டு ராஜம் கலங்கி, 'ஆனால் என்ன?' என்று சட்டெனக் கேட்டாள்.

'சொல்லட்டுமா?' என்று கூறியவாறு நடேசன் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தான்.

'சொல்லுங்கள்' என்று ராஜம் பதற்றத்துடன் அவசரப்படுத்தினாள்.

'நம்மைச் சோதனை செய்யத்தான்!' என்றான் நடேசன் கடைசியாக.

ராஜம் ஒரு கணம் பேச்சற்றுப் போனாள். பிறகு கோபத்துடன், 'நீங்கள் சொல்லுவது எனக்கு அர்த்தமாகவில்லை' என்றாள்.

அப்பொழுது யாரோ வாசற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

'யார், இந்த வேளையில் கதவைத் தட்டுகிறார்கள்?' என்று ராஜம் சலிப்புடன் கேட்டாள்.

நடேசன் குதித்தெழுந்து, 'அவன்தான்! பட்டு தான்! சீக்கிரம்! படுக்கையைச் சுருட்டி அறையில் கொண்டு போய்ப் போட்டுக் கொள்ளுங்கள். நான் கதவைத் திறக்கிறேன்; சீக்கிரம்!' என்றான்.

ராஜத்திற்கு ஒன்றும் புரியவில்லை.

'எதற்காகப் படுக்கையைச் சுருட்டுவது? அவர் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று உட்கார்ந்தபடியே கேட்டாள்.

நடேசன் நின்றநிலைகொள்ளாதவனாய், 'தெரியும்; தயவு செய்து சொன்னபடிக் கேளுங்கள்! இல்லாமற் போனால் விஷயம் பிரமாதமாகி விடும்!' என்று அவசரப்பட்டான்.

ராஜம் படுக்கையிலிருந்து எழுந்தவாறு, 'என்ன பிரமாதம்? நான் போய், யார் என்று பார்த்துவிட்டு வருகிறேன். அவராக இருக்க முடியாது. வண்டி கட்டாயம் கிடைத்திருக்கும்' என்று கீழே போகப் போனாள்.

நடேசன் வழி மறித்து, 'சற்று நான் சொல்வதைக் கேளுங்கள்' என்று அதட்டினான்.

ராஜத்துக்கு உண்மையாகவே கோபம் தாங்க முடியவில்லை.

'வழி விடுங்கள். அவராக இருக்க முடியாது. என் பெயர் சொல்லிக் கூப்பிடாமல் கதவைத் தட்டுகிற வழக்கம் அவருக்குக் கிடையாது' என்று மேலே போக யத்தனித்தாள்.

அளவுகடந்த பதற்றத்தில் நடேசன், தான் செய்கிறது இன்னதென்றே

உணராமல் ராஜத்தின் கையைப் பிடித்திழுத்து, 'இதோ பாருங்கள்–' என்று சொல்லுவதற்கு முன், 'என்ன துணிச்சல் உங்களுக்கு, என்னைத் தொட? நகருகிறீர்களா இல்லையா? நான் தனியாக இருப்பதால்–' என்று மேலே பேச முடியாமல் திணறினாள்.

நடேசன் உடனே விலகி நின்று, 'காலில் விழுந்து கேட்டுக் கொள்ளு கிறேன்: படுக்கையை எடுத்து உள்ளே போடுங்கள்; நான் கதவைத் திறக்கிறேன். என் வார்த்தையைக் கேளுங்கள்; பிறகு தெரியும்' என்று கெஞ்சினான்.

ராஜம் தயங்கி நின்றாள்.

'ஏன், எதற்காக?'

'பிறகு சொல்லுகிறேன்; அவசரம்! இதோ இரண்டு மூன்று தரம் தட்டிவிட்டான்.'

'நீங்கள் சொல்லுகிறபடிச் செய்ய மனம் வரவில்லை எனக்கு. திருட்டுத்தனம் எதற்காக? இதில் என்ன தப்பு? எனக்கு அவமானமாக இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே வேண்டாவெறுப்பாகப் படுக்கையை உள்ளே கொண்டு போய்ப்போட்டாள்.

'படுத்துக் கொள்ளுங்கள்' என்றான் நடேசன்.

ராஜம் தீர்மானமாக, 'மாட்டேன்; ஆனது ஆகிறது; படுக்கையை எடுத்ததே வெட்கக் கேடு! அதற்குமேல் திருட்டுத்தனம் செய்ய என்னால் முடியாது?' என்று சொன்னதைக் கேட்டுக்கொண்டே நடேசன் கீழே போய்க் கதவைத் திறந்தான்.

'பட்டு!'

பதில் சொல்லாமல் பட்டு படியேறினான். நடேசனும் கதவைத் தாழிட்டுக்கொண்டு பின் தொடர்ந்தான்.

ராஜம் எதிர்கொண்டு போய்த் தன் புருஷனைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் திடுக்கிட்டு நின்றுவிட்டாள். பிறகு சமாளித்துக் கொண்டு, 'ஏன், வண்டி தவறிவிட்டதா? ஏன் வந்துவிட்டீர்கள்?' என்று கேட்டாள்.

பட்டு ஏளனமாக, 'நான் திரும்பி வருவேன் என்று நீங்கள் எண்ண வில்லை; சங்கடமாய்ப் போய்விட்டதாக்கும்!' என்று சொல்லிக் கொண்டே சுற்று முற்றும் சந்தேகத்துடன் பார்த்தவன், கீழே பூவும் சங்கிலியும் கிடப்பதைக் கண்டு, 'இதென்ன?' என்றான்.

நடேசன் திடுக்கிட்டு, 'சிறிது நேரம் இங்கே பேசிக் கொண்டிருந்தோம்' என்றான்.

'ஸரஸ ஸல்லாபங்களாக்கும்!'

ராஜம் அவன் அருகில் போய், 'என்ன சமாசாரம்? ஏன் திரும்பி விட்டீர்கள்?' என்று கேட்டாள். அதுவரையில் பட்டு சொன்னது ஒன்றையும் அவள் சரியாகக் கவனிக்கவில்லை.

'உன் யோக்கியதையைப் பார்க்க!' என்று பட்டு எரிந்து விழுந்தான்.

அப்போதுதான் ராஜத்திற்கு விஷயம் கொஞ்சம் விளங்க ஆரம்பித்தது; சட்டென்று அவள் கண்கள் கலங்கிவிட்டன. அப்போதும், 'என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை' என்றாள்.

பட்டு வெறிகொண்டவன்போலச் சீறிக் கொண்டு, 'புரியுமா? புரியவே புரியாது! அதனால் தானா, இவன் இங்கேயே இருக்கட்டும் என்றாய்?' என்று தலையை ஆட்டினான்.

ராஜத்தின் துக்கம் சட்டென்று மறைந்தது. கண்களில் கோபம் பொங்கிற்று.

'எதனால்தான்?' என்று வெறுப்புடன் கேட்டாள்.

'உன் முகரக்கட்டை இருக்கிறதே, அதனால் தான்!'

ராஜம் அவன் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், 'ஓ, அதற்காகத்தானா, அவர் என்னை உள்ளே போய்ப் படுத்துக்கொள்ளச் சொன்னார்?' என்று சொல்லி ஏளனமாக, 'இந்தப் பூவும் சங்கிலியும் இங்கே இருந்துவிட்டதால் என் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்து விட்டீர்கள் அல்லவா? என்ன துப்பறியும் சாமர்த்தியம்! அதற்குத்தானா இந்தப் பிரயாணம்! பேஷ்! என்ன யுக்தி! எத்தனை நாட்களாக இந்தச் சந்தேகம் உங்களுக்கு?' என்று கேட்டுக்கொண்டே ராஜம் அவனைப் பார்த்த பார்வையில், பட்டு கொஞ்சம் அயர்ந்துவிட்டான்.

'உங்கள் நண்பர்கூடத் தெரிந்து கொள்ளும் படியாக அவ்வளவு வெட்கமில்லாமல் உங்கள் சந்தேகத்தை வெளிக்காட்டியிருக்கிறீர்கள்! அசடு, எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஊருக்குத்தான் புறப்பட்டிருக் கிறீர்கள் என்று இவருடன் நான் வாதாடுகிறேன்.'

'பட்டு, நீ என்பேரில் சந்தேகப்படுவது இருக்கட்டும். உன் மனைவி பேரில் சந்தேகப்படுவது மிகவும் கேவலம்!' என்று சொல்லி நடேசன் முடிப்பதற்குள் பட்டு,'போதுமடா, கண்கூடாகப் பார்த்த பிறகு–' என்று ஆரம்பித்தான்.

ராஜம் குறுக்கிட்டு, 'என்ன பார்த்தீர்கள்? வெட்கமில்லை? இந்த மாதிரி உங்கள் மனைவியைப் பிறர் முன் அவமானம் செய்வதா? என்னை நம்புவது ஒரு புறம் இருக்கட்டும்; நீங்கள் என்னை அவர் முன்பு இவ்வளவு கேவலமாக நடத்திய பிறகு நானுந்தான் வெட்கமில்லாமல் கேட்கிறேன்: உங்களையே நீங்கள் நம்பவில்லையே!' என்று சொல்லி நிறுத்தினாள்.

'என்ன நம்பவில்லை?' என்று பட்டு அவள் சொன்னது புரியாமல் கேட்டான்.

'புரியவில்லையா?' திரும்பவும் சொல்லுகிறேன்: உங்களையே நீங்கள் நம்பவில்லை!'

'எப்படி?'

'எப்படியா? இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமா? சொல்லுகிறேன்: நீங்கள் என் மேல் எதற்காகச் சந்தேகம் கொண்டீர்கள்?

என் நடத்தை கெடாதபடி என்னை முற்றும் உங்களுடையவளாக ஆக்கிக் கொண்டதாக உங்களுக்கு உங்களிடத்திலேயே நம்பிக்கை இல்லை!'

'என்ன, என்ன?' என்று பட்டு ஆச்சரியத்துடன் கேட்டான்.

'ஆமாம், அதுதான் அர்த்தம்! என் மனத்தை நீங்கள் கவரவில்லை என்று உங்களுக்கே சந்தேகம்!'

பட்டுவுக்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. ராஜம் குத்திக் காட்டின பிறகுதான் அந்த உண்மை அவனுக்குத் தென்பட்டது. அவன் வாயடைத்துப் போய் நின்றான்.

அவ்வளவு சங்கடமான நிலைமையிலும் ராஜத்தின் உள்ளத்தில் ஒரு திருப்தி ஏற்பட்டது. புருஷனை இன்னும் தாக்க வேண்டுமென்ற இரக்கமின்மையும் தோன்றிற்று.

'கூடப் பிறந்தவர்போல் உங்களுடன் பழகின இவரை நீங்கள் நம்ப வில்லை. அவர் சொன்னது சரி தான்' என்றாள்.

'என்ன சொன்னான்?' என்று பட்டு சட்டென்று கேட்டான்.

'என்ன சொன்னாரா?'

எல்லாம் சொன்னார்: நீங்கள் ஊருக்குப் போவதாகப் புறப்பட்டது பொய் என்று சொன்னார். எந்த நிமிஷமும் நீங்கள் திரும்பி வரக்கூடும் என்று சொன்னார். இன்னும் என்ன சொல்ல வேண்டும்?... எனக்கு அறையில் தனியாகப் படுத்துக் கொள்ளப் பயமாக இருந்தது. இங்கே நான் படுத்துக்கொள்ளக் கூடாது என்றார் அவர். நான் பிடிவாதமாக இங்கே படுத்துக்கொண்டேன். நீங்கள் கதவைத் தட்டினீர்கள்'.

'நான் என்று எப்படித் தெரிந்தது?'

'அவர் உடனே சொல்லிவிட்டார். நான் திறக்கிறேன் என்று கிளம் பினேன். படுக்கையை உள்ளே கொண்டு போகும்படிக் கெஞ்சினார். 'மாட்டேன், திருட்டுத்தனம்' என்று மறுத்தேன். பிறகு அவர் மன்றாடின தைக் கண்டு அரைமனசுடன் உள்ளே போனேன். போதுமா கதை!'

'நடேசா, உனக்கு எப்படித் தெரிந்தது?' என்று பட்டு வெட்கிய குரலில் கேட்டான்.

'அதெல்லாம் சொன்னால் விகாரம், பட்டு. நான் வருகிறேன். காலையில் ஆள் அனுப்புகிறேன்,சாமான்களை எடுத்துக்கொண்டு போக' என்று நடேசன் சொன்னான்.

'இல்லை, நடேசா; இதுதான் விஷயம்: ஜம்பமாக உன்னை என் மனைவியுடன் சகஜமாகப் பழகச்சொன்னேன். நான் எவ்வளவு பெருந் தன்மை யுடையவன் என்று உங்கள் இருவருக்கும் நிரூபிக்க! ஆனால் கொஞ்ச நாளில் அசூயை உள்ளே தலையெடுத்தது. நாளுக்கு நாள் நீங்கள் தாராளமாகப் பழகுவதைப் பார்க்கப் பார்க்க நான் பைத்தியம் பிடித்தவன்போல் ஆகிவிட்டேன். அவள் உடம்பு காய்ச்சலாக இருந்த போது ஒரு நாள் நீ மருந்தைக் கொட்டி அவளுக்குக் கொடுத்துக்

கொண்டிருந்தாய். அப்போது உன் கை அவள்மேல் பட்டதுபோல் எனக்குத் தோன்றிற்று. நான் வெளியே போய்விட்டுத் திரும்பி உள்ளே நுழைந்து கொண்டிருந்தேன். நான் வருவதைக் கேட்டு நீ சட்டென்று விலகினதுபோல் எனக்குப் பட்டது; அன்று பிடித்தது, பிசாசு சரியாக–'

'போதும், வேண்டாம்!' என்று ராஜம் அருவருப்புடன் கத்தினாள்.

'ராஜம் சொன்ன வார்த்தை ஆயிரத்தில்ஒரு வார்த்தை. என்னிடமே நம்பிக்கை இல்லாதவன் போலத்தான் நான் நடந்துகொண்டேன். என்னை மன்னிப்பீர்களா?'

நடேசன் கண் கலங்கி, 'கிடக்கிறது, பட்டு, நான் வரலாமோ?' என்று நகர்ந்தான்.

'இல்லை, நடேசா. இங்கேயே இரு' என்று பட்டு கெஞ்சினான்.

'முடியாது, அவர் இனிமேல் இங்கே இருக்க முடியாது' என்றாள் ராஜம், அழுகை நெஞ்சை அடைக்க.

'ஏன்?' என்று பட்டு திடுக்கிட்டுக் கேட்டான்.

'மனசில் களங்கம் ஏற்பட்டு விட்டது. இனிமேல் முன்போல் சகஜ மாகப் பழக முடியாது. எடுத்ததற்கெல்லாம் வெட்கம் பிடுங்கித் தின்னும். வீடு எல்லோருக்கும் நரகம் ஆகிவிடும்.'

'சில நாட்களில் சரியாகப் போய்விடாதா?'

'போகாது. அவர் முகத்தைப் பார்த்து நான் இனிமேல் எப்படிப் பேசுவது?'

'பட்டு, உன் மனைவி சொல்வது நிஜம்' என்றான் நடேசன்.

என் தப்புக்காக அவன் வீட்டை விட்டுப் போக வேண்டுமா?'

'கண்டிப்பாக; இல்லாவிட்டால், நான்போயாக வேண்டும்.'

'அவன் என்ன செய்தான்?'

'ஒன்றும் செய்யவில்லை; நிரபராதி. அவர் வீட்டைவிட்டுப் போக நேர்ந்தது. இனிமேல் எதற்கு அதெல்லாம்?'

'பட்டு, நான் இங்கே இருக்க இணங்கினதுதான் தப்பு' என்று சொல்லிவிட்டு, நடேசன் மெதுவாக வெளியே போனான்.

'கதவைத் தாழிட்டுக்கொள்' என்று கீழேயிருந்து அவன் துக்கக் குரல் கேட்டது.

'எல்லாம் என் தப்பு, ராஜம்!' என்று சொல்லிக் கொண்டு பட்டு நாற்காலியில் சாய்ந்தான்.

ராஜம் விக்கி விக்கி அழுதாள். விக்கல்களிடையே சிறிது கழித்து, 'இல்லை, என்மேல்தான் பிசகு; எனக்குத் தெரிந்திருக்க வேண்டும் பெண்ணாகப் பிறந்து! என்ன சொன்னாலும் பிற புருஷனுடன் நான் அவ்வளவு சகஜமாகப் பழகி இருக்கக்கூடாது' என்று சொல்லிக் கொண்டு தாழிடச் சென்றாள்.

●